13

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/S. S. MARIMUTHU ROUGH STONE AND GRAVEL QUARRY, SF NO. 10/12, 11/2A, 11/2C, 11/2D, 11/2E, 11/2F, 11/2G(P), 11/2H(P), 11/2I(P), 11/2J2B & 15/2B1, KOTTAIYUR VILLAGE,VIRUDHUNAGAR TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 13.06.2023, 11.00 A.M AT V.O.C KALYANA MAHAL, AVUDAYAPURAM VILLAGE, VIRUDHUNAGAR TALUK, VIRUDHUNAGAR DISTRICT**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | M.Sivakumar | : | Revenue Divisional Officer/<br>Sub-Divisional Magistrate<br>Sattur. |
| 2 | G. Ramaraj | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 3 | D.M. Krishnababu | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 4 | S. Baskaran | : | Tahsildar,<br>Virudhunagar Taluk. |
| 5 | V. Kalaijothi | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board<br>Virudhunagar |

Public, Project proponent 93 Nos (List enclosed)

The public hearing under EIA Notification, 2006 for the proposed project of M/s. S. Marimuthu Rough Stone and Gravel Quarry, SF No. 10/12, 11/2A, 11/2C, 11/2D, 11/2E, 11/2F, 11/2G(P), 11/2H(P), 11/2I(P), 11/2J2B & 15/2B1, Kottaiyur Village,Virudhunagar Taluk, Virudhunagar District was conducted at V.O.C Kalyana

Mahal, Avudayapuram Village, Virudhunagar Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer/Sub-Divisional Magistrate, Sattur, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinakaran" and "The New Indian Express" on 27.04.2023. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating phamlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written complaints would also be received.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer, Sattur initiated the Public Hearing process. After that, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s S. Marimuthu Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

After that, the public has furnished their views with respect to the project as follows –

**Thiru.Balamurugan, R.R.Nagar**

Thiru.Balamurugan stated that he does not have objection for Establishment of this quarry. The officials should monitor whether this quarry is following safety and control measures properly. Further, he requested that the proponent should explain the indirect employment given to the local public in details. Also he requested that employment shall be given to local public only. Further he stated that he belongs to 'Communist Party of India' and has not told that quarry should not come. He requested no ill effects should happen to the public due to this quarry and requested that display board showing the details of quarrying activities should be erected by the quarries.

The quarry activities and blasting operations shall be carried out without causing any hindrance to the local public. The CER amount should be spent properly. There is an opportunity for new employment due to this quarry and the local public should be used for blasting and other operation. The activities of the quarry should be monitored by the TNPC Board. He welcomes the project if it does not cause any ill effects.

**Thiru.Ponnusamy, Valayapatti**

Thiru.Poonusamy stated that he belongs to valayapatti and moved to chinnayapuram for agricultural works. There is agricultural land near this proposed quarry and it is getting affected by dust emission from blasting operations. He objected the establishment of quarry.

**Tmt.Pappa, Valayapatti**

Tmt.Pappa informed that she belongs to valayapatti and doing agriculture works in Chinnayapuram. She further stated that she is having small children and questioned how the children will sleep amidst of blasting operation. Further, she told that about 20 persons are doing agricultural works along with her including some deaf persons and they will be affected due to the blasting operations. So she objected the quarry operations near agriculture fields.

**Tmt.Muthumari, Valayapatti**

Tmt.Muthumari stated that she is doing agriculture work near this quarry and also having house there. She further stated that dust emission caused due to lorry movement. Also stated that stones are falling in agriculture fields and causes damage to the agriculture. Further she stated that the quarry owners are not sprinkling water to control the dust emission. So, she objected the quarry.

**Tmt.Pappa, Valayapatti**

Tmt.Pappa while speaking again stated that there are aged persons also carrying out gardening works and they cannot run fast during blasting operation.

**Thiru.P.Sridhar, Chinnayapuram**

Thiru. Sridhar stated that agriculture work will be affected and water source become depleted due to this quarry operation. He further told that the lorries are utilizing the water ways near to the quarry and water ways are getting damaged.

**Thiru.Pounraj,Chinnayapuram**

Thiru. Pounraj informed that his land is located nearer to the quarry and cracks are formed in residential houses due to blasting activities. Two houses were damaged due to blasting. He further told that heavy noise is coming in night time due to quarry operations and they are not sprinkling water properly. He also told that he is having a tea stall near to the quarry and hence there is a possibility of health issues to him. He objected the quarry.

**Thiru.Baskaran,Chinnayapuram**

Thiru. Baskaran stated that damages are being caused to roof slaps due to blasting operations.

**Thiru.S.Kumaran, Chinnayapuram**

Thiru.S. Kumaran informed that he has no objection for the quarry and requested to run the quarry without affecting the environment.

**Thiru.D.Sureshkumar, Chinnayapuram**

Thiru. Sureshkumar informed that the quarries are functioning without causing any disturbance to public and he does not have any objection for establishment quarry.

**Thiru.Rajendran, Chinnayapuram**

Thiru.Rajendran stated that his land is located nearer to quarry and requested to operate the quarry without causing any issues to the agriculture activities.

**Thiru.Nagarajan, Chinnayapuram**

Thiru. Nagarajan stated that he ascertained from the project report that the quarry is proposed with good intention and told that there are no issues due to the existing quarries. He also told that there will be development due to this type of industry. He also added that this unit has proposed to adopt new technologies and proposed to avoid machineries and blasting operation which cause heavy noise. If any disturbance noticed during the operation of quarry, it should be brought to the notice respective officials to rectify the defects.

He requested that the unit shall develop more green belt to prevent the damage to environment and employment should be given to local public. Further, he requested that the officials shall take necessary action for the petitions received from the public.

He welcomes this project with a request to protect the livelihood.

**Tmt.Pandeeswari, Chinnayapuram**

Tmt.Pandeeswari told that the construction materials are available in lesser cost as the quarry located nearer and told that the quarries are repairing roads. She welcomes the projects.

**Thiru.Vidiyal.Veeraperumal, Social activist, State Deputy Secretary ( Labour wing), Tamil puligal party:**

Thiru.Vidiyal Veeraperumal stated that public hearings are being conducted

continuously in Virudhunagar District for the establishment of new stone quarries. He further stated that, two months before, a Public hearing was conducted in Rajapalayam and 90% of the public objected the project. However, permission has been given. So he told that the public hearing is an eye wash only. If complaint lodged to TNPC Board against the function of quarry, they are informing that they do not have any power to take action against quarries. The District Mineral Trust Fund shall be utilized only for providing the basic infrastructure facilities for the local public. He further stated that even though there are 150 quarries in Virudhunagar district, the revenue loss is happened to government due to improper monitoring of quarries.

He further stated that due to the quarry operations, ground water will get depleted and the future generation will get affected. He also added that no quarry owners are closing the mined pits properly and requested that permission shall not be the renewed to the quarries if the permission is expired. In this regard, petitions have been lodged; However, no action has been taken. He also stated that no action is being taken against the quarries which are extracting more than the permitted quarries.

He also stated that Drinking water and agriculture activities will get affected and if permission is given to this quarry, then he will file a petition before Honourable court. He also informed that there are quarries under operation even after the permission expired.

He further stated that if a petitions are lodged in this regard with Environment Impact Assessment authority, is redirecting to the Mines department only and the District Mineral Trust Fund is not being utilized properly. Finally he stated that permission should not be given to quarry.

19

**Tmt.M.Pandiselvi, Sennelkudi**

Tmt.Pandiselvi asked that how the people, who are objecting the quarry, will build the house. In this time the some of the public in the meeting objected her speech.

**Tmt.Saraswathi, Kalaperumalpatti**

Tmt.Saraswathi informed that, she is doing agriculture activities in that area. The agriculture activities are being affected due to the dust emission from the quarry. Agriculture activities are very important as like house. Due to the deposition of dust in flower of the plant, the yield is getting reduced. The plants which yield usually in two years are not yielding even after five years. Agriculture activities are affected very heavily and yield become less and objected the establishment of quarry.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer / Sub-Divisional Magistrate, Sattur invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted. He also thanked all and requested to furnish their views if any in written and 4 numbers of petitions were received in person.

With this, the meeting came to the end.

19.6.2023

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

19/6/23

Revenue Divisional Officer /
Sub-Divisional Magistrate
Sattur
Virudhunagar District

Enclosures:

1. Copy of Attendance Register (Total 8 – pages, 93 persons)
2. Video graph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், கோட்டையூர் கிராமம், புல எண்கள். 10/12, 11/2A, 11/2C, 11/2D, 11/2E, 11/2F, 11/2G(P), 11/2H(P), 11/2I(P), 11/2J2B & 15/2B1- தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். எஸ்.மாரிமுத்து உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 13.06.2023 முற்பகல் 11.00 மணியளவில் விருதுநகர் மாவட்டம், ஆவுடையாபுரம் கிராமத்தில் உள்ள தி/ள். வ.உ.சி. கல்யாண மஹாலில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. மு.சிவக்குமார் | : | வருவாய் கோட்டாசியர்,<br>சாத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 2 | திரு. கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | திரு. து.மு. கிருஷ்ணபாபு | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 4 | திரு. செ.பாஸ்கரன் | : | வட்டாசியர்,<br>விருதுநகர் வட்டம். |
| 5 | செல்வி. வே.கலைஜோதி | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |

பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 93 நபர்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், கோட்டையூர் கிராமத்தில் புல எண்கள். 10/12, 11/2A, 11/2C, 11/2D, 11/2E, 11/2F, 11/2G(P), 11/2H(P), 11/2I(P), 11/2J2B &

15/2B1ல் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். எஸ்.மாரிமுத்து உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனம், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் விருதுநகர் மாவட்டம், ஆவுடையாபுரம் கிராமத்தில் உள்ள தி/ள். வ.உ.சி. கல்யாண மஹாலில் 13.06.2023 அன்று முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாசியர், ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினகரன்" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 27.04.2023 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வழங்கலாம் என கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக விண்ணப்பங்கள் வழங்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் என தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, வருவாய் கோட்டாசியர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியை கேட்டுக்கொண்டு,

அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன்பின் தி/ள். எஸ்.மாரிமுத்து உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர் இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

<u>திரு. பாலமுருகன், ஆர்.ஆர்.நகர் :</u>

திரு. பாலமுருகன் அவர்கள், தனக்கு இத்திட்டத்தில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை எனவும், குவாரியானது மாசு தடுப்பு முறைகளை முறையாக கடைபிடிக்கிறதா என்பதை அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும் எனவும் கூறினார். மேலும் இத்திட்டம் வருவதனால் சுற்றுப்புற மக்களுக்கு கிடைக்கும் மறைமுகமாக வேலைவாய்ப்புகள் குறித்து விரிவாக தெரிவிக்க வேண்டும் எனவும், வேலைவாய்ப்பு என்பது குவாரி பகுதியை சுற்றியுள்ள மக்களுக்கு கிடைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். தான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் எனவும், தான் எந்த குவாரியும் வர வேண்டாம் என்று கூறவில்லை எனவும், இருப்பினும் உள்ளூர் மக்களுக்கு திட்டத்தால் எவ்வித தீங்கும் விளைவிக்காமல் இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். மேலும், குவாரிகள் தங்களது குத்தகை விபரம் குறித்த தகவல் கொண்ட தகவல் பலகைகளை வைக்க வேண்டும் எனவும் கூறினார்.

மக்களுக்கு பாதிப்பு இல்லாமல் குவாரி தொழில் நடத்தவும் மற்றும் வெடி வைக்கவும் வேண்டும். மேலும் CER நிதியை முறையாக செலவழிக்க வேண்டும் எனக் கூறினார். குவாரி வருவதினால் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும், இக்குவாரியில் வெடி போடுவதற்கும், கல் எடுப்பதற்கும் அப்பகுதி மக்கள் பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும் தொழிற்சலைகளின் செயல்பாட்டை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முறையாக கண்காணிக்க வேண்டும் எனவும், குவாரியினால் பாதிப்பு இல்லை என்றால், ஆட்சேபனை இல்லை எனவும் தெரிவித்தார்.

திரு. பொன்னுச்சாமி, வளையப்பட்டி :

திரு. பொன்னுச்சாமி அவர்கள், தான் வளையபட்டியை சேர்ந்தவர் என்றும், சின்னையாபுரத்தில் தோட்ட வேலைக்காக குடிபெயர்ந்துவிட்டதாகவும் கூறினார். மேலும், இந்த குவாரி அமையும் இடத்தின் பக்கமாக தோட்டம் உள்ளதாகவும், குவாரியில் வெடி போடுவதால் தூசு பரவுவதாகவும் கூறினார். எனவே இந்த குவாரி அமைய வேண்டாம் என கேட்டுக் கொண்டார்.

திருமதி. பாப்பா, வளையப்பட்டி :

திருமதி. பாப்பா அவர்கள் தான் வளையபட்டியை சேர்ந்தவர் என்றும், சின்னையாபுரத்தில் விவசாயம் செய்த வருகிறோம் என்றும் கூறினார். கைக்குழந்தைகள் வைத்திருக்கிறோம் என்றும், வெடி போடும் சத்தத்தினால் குழந்தைகள் எவ்வாறு தூங்கும் எனக் கேட்டார். மேலும், தன்னுடன் 20 நபர்கள் வேலைபார்ப்பதாகவும், இதில் காது கேளாதவர்களும் இருக்கிறார்கள் என்றும், வெடி போடுவது அவர்களுக்கு கேட்காது என்றும் கூறினார். அதனால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். எனவே, அவர்கள் விவசாயம் செய்யும் இடத்திற்கு அருகாமையில் கல்குவாரி வேண்டாம் எனக் கேட்டு கொண்டார்.

திருமதி. முத்துமாரி, வளையப்பட்டி :

திருமதி. முத்துமாரி அவர்கள், தான் இந்த குவாரி அருகாமையில் விவசாயம் பார்ப்பதாகவும், தோட்டத்திலேயே வீடு கட்டியுள்ளதாகவும் கூறினார். அதிக லாரிகள் செல்வதால் தூசு அதிகமாக வருகிறது எனவும், வெடி வெடிப்பதால் கற்கள் விவசாய நிலங்களில் விழுகிறது எனவும், அதனால் விவசாயம் பாதிப்படைவதாகவும் தெரிவித்தார். மேலும், குவாரி உரிமையாளர் முறையாக நீர் தெளிப்பதில்லை எனவும் கூறினார். எனவே இந்த குவாரி அமைய வேண்டாம் என எதிர்ப்பு தெரிவித்தார்.

**திருமதி .பாப்பா, வளையப்பட்டி :**

திருமதி. பாப்பா அவர்கள் மீண்டும் பேசுகையில் இங்கு வயதானவர்களும் இருப்பதாகவும், அவர்கள் குவாரியில் வெடி வெடிக்கும் போது விரைவாக செல்ல இயலாது எனவும் கூறினார்.

**திரு. பி.ஸ்ரீதர், சின்னையாபுரம் :**

திரு. ஸ்ரீதர் அவர்கள், குவாரி வருவதால் விவசாயம் பாதிக்கப்படும் என்றும், நீர் ஆதாரம் குறைந்து விட்டது என்றும், குவாரி அமையும் இடத்திற்கு அருகிலுள்ள நீர் வழி பாதைகளை லாரிகள் உபயோகப்படுத்துவதாகவும், அதனால் அந்த நீர்வழி பாதைகள் பாதிக்கப்படும் என்றும் கூறினார்.

**திரு.பவுன்ராஜ், சின்னையாபுரம் :**

திரு. பவுன்ராஜ் அவர்கள், அவருடைய தோட்டம் குவாரிக்கு அருகாமையில் உள்ளது என்றும், வெடி போடுவதால் குடியிருக்கும் வீடுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகவும், பக்கத்தில் இரண்டு வீடுகள் இடிந்துள்ளதாகவும் கூறினார். மேலும், இரவு நேரங்களில் குவாரி செயல்படுவதால் அதிக சத்தம் வருவதாகவும், முறையாக நீர் தெளிப்பதில்லை எனவும் கூறினார். மேலும், அவர் குவாரிக்கு அருகாமையில் டீக்கடை வைத்திருப்பதாகவும், இதனால் தனக்கு உடல்நல பாதிப்பு வரும் எனவும் கூறி நடவடிக்கை எடுக்குமாறும், குவாரி வேண்டாம் என்றும் கூறினார்.

**திரு. பாஸ்கரன், சின்னையாபுரம்:**

திரு. பாஸ்கரன் அவர்கள், வெடி போடுவதால் வீடுகளில் கூரைகள் பாதிப்படைந்து இடிந்து விழுவதாக கூறினார்.

திரு. எஸ்.குமரன், சின்னையாபுரம் :

திரு. குமரன் அவர்கள், கல்குவாரி அமைப்பதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்றும், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாமல் குவாரி நடத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

திரு. டி.சுரேஷ்குமார், சின்னையாபுரம் :

திரு. சுரேஷ்குமார் அவர்கள், மக்களுக்கு எந்த வித பாதிப்பும் இல்லாமல் இயங்கும் பட்சத்தில் இந்த குவாரி அமைப்பதற்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை எனக் கூறினார்.

திரு. ராஜேந்திரன், சின்னையாபுரம் :

திரு. ராஜேந்திரன் அவர்கள், இந்த குவாரி அமையும் இடத்திற்கு அருகில் தன்னுடைய தோட்டம் அமைந்துள்ளதாகவும், ஆகையால், விவசாயத்திற்கு எந்த வித பாதிப்பும் இல்லாமல் இயங்க வேண்டும் எனக் கூறினார்.

திரு. நாகராஜன், சின்னையாபுரம் :

திரு. நாகராஜன் அவர்கள், குவாரி திட்டத்தின் விளக்கவுரையின் அடிப்படையில் பார்க்கையில் குவாரி அமைப்பது நல்ல நோக்கத்திற்காக என தெரிகிறது எனக் கூறினார். ஏற்கனவே அருகில் செயல்பட்டு வரும் குவாரிகளால் எந்த பாதிப்பும் இல்லை என்றும், இது போன்ற தொழில் அமைவதினால் முன்னேற்றம் ஏற்படும் எனவும் கூறினார். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு குறித்த எதிர்ப்பை கவனத்தில் கொண்டு, திட்டத்தில் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்த உள்ளதாகவும், அதிக சப்தம் வரும் இயந்திரம் மற்றும் வெடி பொருட்களை பயன்படுத்த போவதில்லை என திட்ட விளக்கவுரையில் கூறியுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இக்குவாரியின் இயக்கத்தினால் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் அதனை உடனே நிர்வாகத்திற்கும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரிவித்து சரி செய்து கொள்ள வேண்டும் என்றும், சுற்றுச்சூழல் மற்றும் மக்கள் பாதிக்காதவாறு மரங்கள் நிறைய வளர்க்க வேண்டும் என்றும், சுற்றுப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும்

என்றும் கூறி இத்திட்டத்தினை வரவேற்றார். மேலும், அதிகாரிகள் மக்கள் அளிக்கும் புகார்களுக்கு தக்க நடவடிக்கை மேற்கொண்டு அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்காதவாறு பார்த்து கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

திருமதி. எம். பாண்டீஸ்வரி, சின்னையாபுரம்:

திருமதி. பாண்டீஸ்வரி அவர்கள், குவாரி அருகில் இருப்பதால் வீடு கட்டுவதற்கான பொருட்கள் குறைந்த விலையில் கிடைப்பதாகவும், அங்குள்ள பாதைகளை சரிசெய்து தருகிறார்கள் என்றும், இதனால் இத்திட்டத்தை வரவேற்கிறேன் என்றும் கூறினார்.

திரு.விடியல்.வீரபெருமாள், சமூக ஆர்வலர், தமிழ் புலிகள் கட்சியின் மாநில துணை தொழிற்சங்கச் செயலாளர் :

திரு. விடியல் வீரபெருமாள் அவர்கள், விருதுநகர் மாவட்டத்தில் தொடர்ச்சியாக கல் குவாரிகள் புதிதாக இயங்குவதற்கு கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்று கொண்டிருக்கிறது என்றும், இதே போல் இரண்டு மாதத்திற்கு முன்பாக இராஜபாளையத்தில் நடைபெற்ற கூட்டத்தில், நூற்றுக்கு தொண்ணூறு நபர்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையிலும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்றும், எனவே கருத்து கேட்பு கூட்டம் என்பது ஒரு சடங்கு தான் என்றும் கூறினார். குவாரி செயல்பாட்டின் மீது மனு கொடுக்கும் பொழுது, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமானது இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க எங்களுக்கு அதிகாரம் இல்லை எனக் கூறும் பொழுது, எதற்காக இந்த கூட்டத்தை நடத்த வேண்டும் என வினவினார். கனிம வள அறக்கட்டளை நிதி ஆனது அருகில் உள்ள மக்களுக்கு அடிப்படை வசதி செய்து தருவதற்காக செலவிடப்பட வேண்டும் என்றும், விருதுநகர் மாவட்டத்தில் 150 குவாரிகளுக்கு அதிகமாக இருந்தும், முறையான கண்காணிப்பு இல்லாததால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதாக கூறினார். மேலும், இத்திட்டம் வருவதனால் நிலத்தடிநீருக்கு பாதிப்பு ஏற்படும் என்றும், வருங்கால சந்ததிகளுக்குப் பாதிப்பு ஏற்படும் என்றும், குவாரி முடிந்த பிறகு பள்ளத்தை எந்த உரிமையாளரும் முறையாக மூடுவதில்லை என்றும், அனுமதி முடிந்த குவாரிகளுக்கு அனுமதி வழங்கக் கூடாது என்றார்.

இது தொடர்பாக ஏற்கனவே கொடுக்கப்பட்ட மனுக்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக்கூறினார். இங்குள்ள குவாரிகளில் அனுமதிக்கப்பட்ட அளவை விட கனிமங்கள் அதிகமாக எடுக்கிறார்கள். மேலும் இத்திட்டத்தினால் குடிநீர் மற்றும் விவசாயம் பாதிக்கப்படும் எனவும், இக்குவாரிக்கு அனுமதி அளித்தால் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்படும் எனவும் தெரிவித்தார். இங்கு குவாரிகள் அனுமதி காலம் முடிந்த பின்னும் செயல்பட்டு வருவதாகவும், அதுகுறித்த மனுக்களை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பினால், அது மீண்டும் கனிம வளத்துறைக்கே அனுப்பப்படுகிறது எனவும், கனிம வள அறக்கட்டளை நிதியானது முறையாக பயன்படுத்தப்படவில்லை எனவும், இந்த குவாரிக்கு அனுமதி மறுக்கப்பட வேண்டும் எனவும் கூறினார்.

திருமதி. எம். பாண்டிச்செல்வி, செந்நெல்குடி:

திருமதி. பாண்டிசெல்வி அவர்கள், குவாரி வேண்டாம் எனக் கூறுபவர்கள் எவ்வாறு வீடு கட்ட இயலும் என வினவினார். இவ்வாறு இவர் பேசத்தொடங்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, கூட்டத்தில் சற்று சலசலப்பு ஏற்பட்டது.

திருமதி. சரஸ்வதி, காலப்பெருமாள்பட்டி:

திருமதி. சரஸ்வதி அவர்கள், தான் அப்பகுதியில் விவசாயம் செய்து வருவதாகவும், கல்குவாரியிலிருந்து வரும் தூசியினால் விவசாயம் பாதிப்படைகிறது எனவும், வீடு போல விவசாயமும் இன்றியமையாதது எனக் கூறினார். கல்குவாரியிலிருந்து வரும் தூசி பூக்கள் மீது பட்டு, பூக்கள் பூப்பது குறைந்து விடுகிறது எனவும், இரண்டு வருடத்தில் காய்க்க கூடிய செடிகள் ஐந்து வருடமாகியும் வளரவில்லை எனவும் கூறினார். மேலும், விவசாயம் அதிகமாக பாதிக்கப்படுகிறது மற்றும் அவர்கள் தோட்டத்தில் விளைச்சல் குறைந்துள்ளதாகவும் கூறி இத்திட்டத்தை வேண்டாம் என்று கூறி எதிர்ப்பு தெரிவித்ததார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறு யாரும் முன்வராததால், வருவாய் கோட்டாசியர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை

நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். மேலும், எழுத்துப்பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து நான்கு மனுக்கள் பெறப்பட்டன.

அத்துடன் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

19.6.2023
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

வருவாய் கோட்டாசியர்,
சாத்தூர்
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் 8 - பக்கங்கள், 93 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கை செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).